DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.
**Present:Selvi**.M. Mayadevi,B.A., L.L.B.,
**Judicial Magistrate No.I., Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | STC.No. 226/2022 |
| Deposition of Witness for Prosecution | PW: 1 |
| Cr.No. and Police Station : | |
| Name: | திரு.பாக்கியராஜ் |
| Father's /Husband Name: | த.பெ. ரங்கநாதன் |
| Village: | சிதம்பரம் |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act The Oaths Act 1969(Act.44/1969) of the day of 16-04-2026** | |

Accused called absent. U/s. 355 BNSS petition filed and allowed.

**எதிர் மனு தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் எங்கு , என்ன வேலை செய்கிறேன் என்றால் கடலூாரில் இந்து சமய அறநிலையத்துறையில் ஆபிஸ் அசிஸ்டன்டாக பணிபுரிந்து வருகிறேன். அண்ணாமலை பல்கலைகழகத்தில் எப்போது பணியில் சேர்ந்தேன் என்றால் 27.03.2009. எதிரி எப்போது அண்ணாமலை பல்கலைகழகத்தில் பணியில் சேர்ந்தார் என்றால் 2011 ம் ஆண்டு சேர்ந்தார். நான் நிரந்தர ஊழியரா என்றால் நிரந்தர ஊழியர் தான். எதிரி நிரந்தர ஊழியரா என்றால் அவர் பணிக்கு சேரும் போது தற்காலிக ஊழியராகத்தான் சேர்ந்தார். 2011 ம் ஆண்டு எனக்கு மாத என்ன சம்பளம் என்றால் ரூ.17,000/- . நான் திருமணம் செய்த ஊர் ஓடக்க நல்லூர். எனது மாமனார் பெயர் என்ன என்றால் கலையழகன். எனது மாமனார் கலையழகன் இந்த வழக்கு எதிரி சுரேஷின் மேல் மற்றொரு காசோலை வழக்கு செய்துள்ளார் என்றால் சரிதான். எதிரி க்கு ஓடக்க நல்லூரில் உறவினர் இருக்கிறார்களா என்றால் நெருங்கிய உறவினர்கள் இருக்கிறார்கள். எதிரி என்னிடம் ரூ.15 லட்சம் கடன் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக எதிரி கடன் வாங்கினார் என்றால் வீடு கட்டுவதற்காக வாங்கினார். எதிரி என்னிடம் எப்போது பணம் கேட்டார் என்றால் 10.01.2022 அன்று கேட்டார். 10 நாட்களுக்குள் மேற்படி ரூ. 15 லட்சம் தொகையை எவ்வாறு தயார் செய்தேன் என்றால் நான் வீடு கட்டுவதற்காக ரூ. 15 லட்சம் பணம் சேர்த்து வைத்திருந்தேன். 25.01.2022 அன்று எதிரி என் வீட்டிற்கு வந்து பணம் வாங்கினார் என்றால் சரிதான். வேறு யார் எதிரி உடன் வந்தார் என்றால் சுரேஷ் மட்டும் தான் வந்தார். நான் பணம் கொடுத்த போது வேறு யார் இருந்தார்கள் என்றால் எனது அப்பா மற்றும் அம்மா இருந்தார்கள். எதிரியிடம் பணம்

கொடுத்த போது ஆவணம் ஏதேனும் எழுதி வாங்கினேனா என்றால் அன்றைய தேதியில் புரோநோட் எழுதி வாங்கி கொண்டேன். புரோநோட்டில் உள்ள வாசகத்தில் எதிரி வட்டிக்கு பணம் கொடுப்பதாகத்தான் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பிலும், எனது புகாரிலும் எதிரி எனக்கு புரோநோட்டில் மேற்படி எழுதிக் கொடுத்தார் என்ற விபரத்தினை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். (சாட்சியிடம் மேற்படி ஆவணம் காட்டி கேட்ட போது தான் வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளதாகவும் அவரது வழக்கறிஞர் அதை பற்றி குறிப்பிடவில்லை என்று கூறினார்). எதிரியிடம் பெற்ற புரோநோட்டை வைத்து உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் காசோலையை எப்போது கொடுத்தார் 29.04.2022 அன்று 3 மாதத்தில் பணம் தருவதாக சொல்லிக் கொடுத்தார். எதிரி வட்டியாக என்னிடம் பணம் கொடுத்தாரா என்றால் இல்லை. நான் புரோநோட் பெற்றும் 3 மாதம் கழித்து காசோலையை ஏன் பெற்றேன் என்றால் எதிரி புரோநோட் கொடுத்துவிட்டு 3 மாதத்தில் பணம் தருவதாக சொன்னார். அவர் கொடுக்காததால் எதிரி வீட்டிற்கு சென்று அவரிடம் காசோலையை பெற்றேன்.

2) ரூ.15 லட்சம் கடனை தவிர எதிரிக்கும், எனக்கும் வேறு எந்த வித கணக்கு வழக்கு இல்லை என்றால் சரிதான். எதிரி மீது ஏலச்சீட்டு நடத்தி ஏமாற்றியதாக மாவட்ட குற்றபிரிவு காவல்நிலையத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கில் நான் 15 வது பட்டியல் சாட்சியாக உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அதில் நான் சாட்சியாக இல்லை. மேற்படி வழக்கில் ஆய்வாளர் என்னை விசாரித்த போது எனது மனைவி, எனது மனைவியின் 2 அக்கா கணவர்கள் எதிரியின் ஏலச்சீட்டில் சேர்ந்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மனைவி எவ்வளவு சீட்டு போட்டார் என்றால் ரூ.5 லட்சத்திற்கு 2 சீட்டுக்கள் போட்டுள்ளார். எனது மனைவியின் 2 அக்கா கணவர்கள் இருவரும் எவ்வளவு சீட்டு போட்டுள்ளார்கள் என்றால் ரூ.5 லட்சத்திற்கு 2 சீட்டுக்கள் போட்டுள்ளார்கள். மேற்படி மூவரும் எவ்வளவு மாதம் பணம் கட்டினார்கள் என்றால் பணம் செலுத்தினார்கள் என்று தெரி யும் எவ்வளவு மாதம் என்று தெரியாது. ஆய்வாளர் என்னை விசாரித்த போது நான் சுரேஷிடம் ஏலச்சீட்டில் சேர்ந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ஆய்வாளர் என்னை விசாரித்த போது சுரேஷ் என்னிடம் வீடு கட்டுவதற்காக பணம் கேட்டபோது நான் தரவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. ஆய்வாளர் என்னை விசாரித்த போது சுரேஷ் என்னை வற்புறுத்தி கேட்டதால் ரூ. 5 லட்சத்து 50 ஆயிரம் 3 தவணையாக என் மனைவியின் முன்னால் வைத்து எதிரி சுரேஷிடம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. என் மனைவி செலுத்திய ஏலசீட்டிற்கு ரூ.4 லட்சத்து 20 ஆயிரமும் எதிரி சுரேஷ் என்னிடம் கடனாக பெற்ற ரூ. 5 லட்சத்து 50 ஆயிரம் சேர்த்து ரூ.9 லட்சத்து70 ஆயிரம் எனக்கு தரவேண்டும் என்று ஆய்வாளர் என்னை விசாரித்த போது சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு அது

பற்றி தெரியாது.

3) எனது மனைவி என்ன வேலை செய்கிறார் என்றால் அவர் இல்லத்தரசி. என் மனைவி ரூ.4 லட்சத்து 20 ஆயிரம் ஏலச்சீட்டு செலுத்தினாரா என்றால் எவ்வளவு செலுத்தினார் என்றால் தெரியாது. அவர் சேர்த்து வைத்திருந்த பணத்தையை செலுத்தியிருக்கலாம். எதிரி என் மனைவிக்கு காசோலை கொடுத்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மனைவி செலுத்திய ஏலசீட்டிற்கு ரூ.4 லட்சத்து 20 ஆயிரமும் எதிரி சுரேஷ் என்னிடம் கடனாக பெற்ற ரூ. 5 லட்சத்து 50 ஆயிரம் சேர்த்து ரூ. 10 லட்சத்திற்காக இந்தியன் வங்கி காசோலை எண்.909946 எதிரி என் மனைவிக்கு கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காசோலை எண். 909943 தான் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காசோலை எண். 909944 பயன்படுத்தி என் மாமனார் கலையழகன் காசோலை வழக்கு(STC. NO-225/2022) தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

4) நான் வேலை செய்த அலுவலகத்தில் மாலதி என்பவர் பணியில் இருந்தார் என்றால் சரிதான். ஜெயக்குமார், கிருபாகரன் ஆகியோரும் பணியில் இருந்தனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாவட்ட குற்றபிரிவு காவல் துறையால் எதிரி சுரேஷ் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில்(CC-27/2025) புகார் தாரர் மாலதி என்றால் சரிதான். மேற்படி மாலதி என்பவர் எதிரியின் ஏலச்சீட்டில் சேர்ந்து எதிரி பணம் தாராததால் மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் எதிரியின் ஏலச்சீட்டில் சேர்ந்ததாகவோ, பணம் கொடுத்ததாகவோ எவ்விதம் ஆவணமும் தாக்க செய்யவில்லை என்றால் சரிதான். 5 காசோலைகளையும் , புரோநோட்டையும் எதிரி தான் நடத்தி வந்த ஏலச்சீட்டிற்காக செக்யூரிட்டியாக கொடுத்து என்றால் சரியல்ல. என்னிடம் கொடுக்கவில்லை. எதிரி என்னிடம் பணம் இல்லை என்று வழக்கு தாக்கல் IP No.1/23 மாண்புமிகு சிதம்பரம் சார்பு நீதிமன்றத்தில் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் காசோலை வழக்கு தாக்கல் செய்த பிறகு தெரியும். என் மனைவிக்கு எதிரி கொடுத்த காசோலை எண். 909946 ஐ( ரு. 10 லட்சத்திற்கு) கடலூர் மாவட்ட குற்றபிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்தபோது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு , என்னிடம் எந்த வித கொடுக்கல் , வாங்கல் இல்லை என்றால் சரியல்ல.

எதிரி என் மனைவிக்கு கொடுத்த காசோலையை பயன்படுத்தி எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(Sd/-**Selvi**.M. Mayadevi,)
J.M.No.I, Chidambaram